# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-14 | August - 2024 | Issue-03

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-


கர்த்தரே ஆவியானவர்;
கர்த்தருடைய ஆவி எங்கேயோ
அங்கே விடுதலையுமுண்டு. 2கொரி-3:17



# ஆவியானவர் தரும் விடுதலை



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இந்த ஆண்டின் 8வது மாதத்தை காண கிருபை பாராட்டின வானாதி வானவருக்குத் துதி தோத்திர பலிகளை ஏறெடுப்போம். அனைவருக்கும் எங்கள் அன்பான சுதந்திர தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். ஆகஸ்டு-15ம் நாள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறபோது, தேசியக் கொடியை ஏற்றுகிறபோது, தேசிய கீதம் பாடுகிறபொது இந்தியாவின் அனைத்து தரப்பு மக்களுக்கும் பெற்ற சுதந்திரம் பறிபோகாமல் காக்கப்பட ஜெபித்துக்கொள்வோம். உயர் படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வுகள், கலந்தாய்வு மற்றும் நேர்காணல்களில் கலந்துகொள்கிற நம் பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்புகிற கோர்ஸ்-களில் அட்மிஷன் கிடைக்க, அவர்களுடைய பண-தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்வோம்.

நமது ஊழிய திட்டங்களான 'ஜெப-ஜன்னல்' ஜெப நேரங்கள் (ஆகஸ்டு 9, 16, 23), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், 'வேதாகம போட்டிகள்' ஆகிய வற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (CONTACT-DETAILS, ONLINE வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-164** **லூக்கா - 4:18**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு


| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| பராபரனுடைய ஆவி என்னிலிருக்கிறது. இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கும்படிக்கும், சிறைப்பட்டோருக்கு விடுதலையையும், குருடருக்கு பார்க்குதலையும் அளித்து, நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் பராபரன் என்னை அனுப்பினார். | கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார் இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களை விடுவிக்கவும், குருடருக்கு பார்வையை அறிவித்து, நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் தேவன் என்னை அனுப்பினார். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| ஆண்டவரின் ஆவியார் என்மேல் உள்ளார்; உள்ளம் உடைந்தோர் குணமடைவர், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்யவும் என்னை கர்த்தர் அனுப்பியுள்ளார். | தேவனுடைய ஆவி என்னிலுள்ளது. சிறைப்பட்டோர் விடுதலை பெறுவர், இதயம் நொறுங்கியவர்கள் குணமடைவர், குருடர் பாார்வை பெறுவர் என அறிவித்து, பலமிழந்து துன்பப்படுவோரை விடுவிக்க தேவன் என்னை அனுப்பியிருக்கிறார். |

**வசன தியானம்-154**

# ஆவியானவர் என்பவர் யார்?


2 Cor-3:17

**அவர்**
**எத்தகைய சுதந்திரத்தை**
**நமக்கு வழங்குகிறார்?**


2கொரி-3:17

**கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. 2கொரி-3:17**

இயேசு தம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரலோகத்திற்கு எழுந்தபோது, மக்களுக்கு 'பரிசுத்த ஆவியானவர்' என்னும் ஒரு பரிசை விட்டுச் சென்றார்: அவர், ஆவியானவரை நம் 'உதவியாளராக' 'வழிகாட்டியாக' (யோவா 14:15-31) ஏற்படுத்திச் சென்றார். பரிசுத்த ஆவியானவர் ஒரு சக்தி அல்ல, அவர் ஒரு நபர், அவர் நம் 'உதவியாளர்.' பிதா மற்றும் குமாரன் ஆகிய இருவருடன் இணைந்து செயல்படும் அவர் உலகைப் படைத்தவர். மேலும் அவரில் நாம் சுதந்திரத்தைக் காண்கிறோம்..

பவுல் ஆவியானவர் குறித்து எழுதியதின் முழு சாராம்சம் என்னவென்றால், நாம் இயேசுவின் விசுவாசிகளாக மாறும்போது பரிசுத்த ஆவியானவரை முழுமையாகப் பெற்று, கடவுள் தரும் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுகிறோம். அத்தகைய சுதந்திரத்தை நாம் இதுவரை அனுபவித்த தில்லை. கடந்த காலத்தில், கடவுள் ஆதாம், ஏவாள், நோவா, ஆபிரகாம், மோசே, யோசுவா, சாமுவேல் போன்றோருடன் நேரடியாய் பேசினார்; ஆனாலும், கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே உறுதியான எல்லைக்கோடு இருந்தது. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு இடைத்தரகர் தேவைப்பட்டார். ஆனால், இயேசுவோ, பரிசுத்த ஆவியை உதவியாளராக நமக்கு தந்திருக்கிறார்.

**பரிசுத்த ஆவியானவர் எத்தகைய சுதந்திரத்தை நமக்கு வழங்குகிறார்?**

ஆவியானவர் நம்முடன் வாழ்கிறார் (யோவா-14:17), நமக்கு ஜீவனைத் தருகிறார் (2கொரி-3:6), நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் உரிமையைத் தருகிறார் (ரோம-8:16), நமது பலவீனங்களில் நம்மைப் பலப்படுத்துகிறார் (அப்-1:10), நமக்கு உதவிசெய்கிறார் (ரோம-8:26மு) எல்லா காரியங்களையும் நமக்கு போதிக்கிறார் (யோவா-14:26), நமக்காக ஜெபிக்கிறார் (ரோம-8:26பி); அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் நம்மை கண்டித்து உணர்த்துகிறார் (யோவா-16:8), உண்மை வழியில், நேர்-வழியில் நம்மை நடத்துகிறார் (யோவா-16:13).

நாம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, நமக்குக் கிடைக்கும் பரிசுத்த ஆவியானவரின் விடுதலைக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். குமாரனாலும், ஆவியானவராலும் மாத்திரமே உண்மையான சுதந்திரத்தை தரமுடியும். மேலும், அந்த சுதந்திரம் மாத்திரமே என்றென்றும் நிலைத்திருக்கும்.


REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

# நாசரேத்திலிருந்து ஒரு விடுதலைப் பாடல்

லூக்கா 4:14-30

**THE NAZARETH MANIFESTO**

## A LIBERATION SONG FROM NAZARETH

**Rev. S.J.D. Dharmaraja**
PRESBYTER AND MISSION DIRECTOR
GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES, SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

இயேசுவானவர் வளர்ந்த ஊராகிய நாசரேத்திலுள்ள ஒரு ஜெப-ஆலயத்தில் நடைபெறும் காட்சியாகும் இது. முதற்பகுதியிலேயே லூக்கா நற்செய்தியாளர் சொல்லும் இந்நிகழ்வை மத்தேயு மற்றும் மாற்கு, பின்னர் நடப்பதாக வர்ணிக்கின்றனர். இயேசு பிசாசின் சோதனையை ஜெயித்தபின் கலிலேயா திரும்பி, ஜெப ஆலயங்களில் பிரசங்கித்தார்; அங்கு அனைவராலும் பாராட்டப் பட்டார். பின்னர், தாம் வளர்ந்த நாசரேத் ஊருக்குச் சென்றார், அங்கு அவர், ஒவ்வொரு வாரமும் ஓய்வுநாள் தொழுகையில் கலந்து கொண்டார். இம்முறை அவர் எழுந்து நின்று, ஏசாயாவின் சுருளிலிருந்து வாசித்துவிட்டு அமர்ந்தார். வாசிக்க எழுந்து நிற்பதும், கற்பிக்க உட்காருவதும் அப்போதைய நடைமுறை யாக இருந்திருக்கும். (மத்தேயுவும் மாற்குவும் இதை விவரிக்கவில்லை). ஜெப ஆலயத்தில் இருந்த அனைவரின் கண்களும் மண்ணின் மைந்தரான தச்சரின் மகன் மீது எவ்வாறு 'நிலையாக' இருந்தது என்பதை லூக்கா விவரிக்கிறார். கிங் ஜேம்ஸ் வேதாகமம், அவர்களின் கண்கள் அவர் மீது 'குறியாய்' இருந்தது என்று கூறுகிறது. இந்நிலையில் இயேசு, ''இன்று இந்த வசனம் உங்கள் செவிகள் கேட்க நிறைவேறியது.'' என்றார்.

**விடுதலைப் பாடல் - நாசரேத் பிரகடனம்:**

''கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; ஏனென்றால்.. ..
ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க அவர் என்னை அபிஷேகம் செய்தார்.
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை அறிவிக்க என்னை அனுப்பினார். மற்றும்.. ..
பார்வையற்றவர்களுக்கு பார்வையை மீட்டுத்தருவதற்காக,
ஒடுக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்காக,
கர்த்தருடைய தயவின் ஆண்டை அறிவிப்பதற்காக.''

கடவுள் என்னை அபிஷேகம் செய்திருக்கிறார் என, இயேசு ஏசாயாவின் வார்த்தை களைப் பாடுகிறார். இது இயேசுவின் நாசரேத் பிரகடனம் எனப்படும் நற்செய்தியின்

முன்னோட்டப் பாடலாகும். இயேசுவின் இந்த வார்த்தைகள் வெளிப்பட்டபோது, யூதர்களின் கூட்டத்தில் இருந்து வந்த தொனி, எரிச்சல் மற்றும் அடக்குமுறைக்கானதாகும். யூதர்கள், ‘‘இவன் தச்சரின் மகன் அல்லவா! இவனது சகோதரர்கள் யாக்கோபு, யோசே, சீமோன் மற்றும் யூதாஸ் அல்லவா! இவனுடைய சகோதரிகளையும் நாம் அறிவோமே! இவனுக்கு விடுதலையின் வரம் எங்கிருந்து கிடைத்தது?'' என்று சொன்னதாக மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் சொல்ல, லூக்கா அதை வேறுவிதமாக, ‘‘யூதர்கள் அவருடைய வாயிலிருந்து வந்த கிருபையான வார்த்தைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.'' என்று வர்ணிக்கிறார். லூக்காவின் கூற்றுப்படி, அவர்கள் அதை சிடுசிடுப்பிலோ, வெறுப்பிலோ கூறாமல் வியப்புடனும் பிரமிப்புடனும் சொன்னதாகத் தெரிகிறது. மத்தேயு மற்றும் மாற்குவில் இயேசு அவர்களிடம், ‘‘தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த நாட்டிலும் தங்கள் வீட்டிலுமே அல்லாமல் மற்ற இடங்களில் மரியாதை இல்லாதவர்கள் அல்ல'' என எதிர்வினையாற்றி அவர்கள் வாயை அடைத்து ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கு முன்னோட்டம் அளிக்கிறார்.

தொடர்ந்து, யூதர்கள் தங்கள் வியப்பிலிருந்து வெளிவந்து ஆத்திரம் அடைவது, பொங்கி எழுந்து இயேசுவை ஊருக்கு வெளியே துரத்துவது, குன்றின் மேல் இருந்து அவரைத் தூக்கி எறிவதற்காக ஒரு மலையின் முகட்டிற்கு அழைத்துச் செல்வது, அவரை கொலை செய்ய முயல்வது போன்ற அனைத்து அடக்கு முறைகளையும் சந்தித்து விடுதலை வீரராக நிற்பது இங்கு விவரிக்கப்படுகிறது. இவ்வாறு, இயேசு, தமது சுவிசேஷத்திற்கு எதிரான, முற்றிலும்-மனிதாபிமானமற்ற எதிர் வினையை மேற்கொள்ளுகிறார்.

**ஆவியானவர் இயேசு-வழியாய் தரும் விடுதலை அனைவருக்குமானது:**

தமது ஆவியின் அபிஷேகத்திற்கு விடுவிக்கும் வல்லமை உண்டு என்பதையும் அவ்விடுதலை அனைவருக்குமானது என்பதையும் இயேசு விளக்குகிறார். தேசத்தில் வறட்சி மற்றும் பஞ்சத்தின்போது இஸ்ரவேலில் அநேக விதவைகள் இருந்தனர் ஆனால் எலியா, சாரிபாத்திலிருந்த விதவையிடமே அனுப்பப்பட்டார். கடவுள் அவளை ‘பிறர்’ என எண்ணாமல் ‘தம்’ மகளாக மீட்டுக்கொண்டார். இஸ்ரவேலில், அனேக தொழுநோயாளிகள் இருந்தனர், ஆனால் கடவுள், எலிசாவின் வழியாக சீரியனாகிய நாகமானையே சுத்தப்படுத்துவதற்கு தேரிந்து கொண்டார். கடவுள் நாகமானை ‘பிறர்’ என எண்ணாமல் ‘தம்’ மகனாக மீட்டுக்கொண்டார். கடவுளின் வாக்குறுதி ‘யூதருக்காக’ மாத்திரம் அல்லாமல் ‘அனைவருக்காகவும்'' இருந்தது (1 மற்றும் 2 ராஜாக்கள்) என்பதை இயேசு அன்று உதாரணங்களாகச் சொல்லி, தமது நற்செய்தியின் வழியாக ஆவியான வரின் விடுவிக்கும் வல்லமை, ஒரு தரப்பு மக்களுக்காக மாத்திரம் அல்லாமல் அது சாதி, மத, இன, பொருளாதார, கலாச்சார மற்றும் வர்க்க எல்லைகளைத் தாண்டி அனைவருக்காகவுமே, என்பதை தெளிவுபடுத்தினார். ஆவியானவருக்கு ஒரு ஆழமான விடுவிக்கும் வல்லமை உண்டு என்ற நற்செய்தியை இயேசு இங்கு நிருபணம் செய்தார். ஆனால், யூதர்களுக்கு இயேசுவின் இந்த பேச்சு பிடிக்கவில்லை.

**கடவுளின் இராஜ்யம் அனைவருக்குமானது:**

இறையரசு அனைவருக்குமானது என்பதை விளக்குவதற்காகவே இயேசு, ஏசாயாவின் கையெழுத்து உரையின் இந்தப் பகுதியை விடுதலையின் பிரகடனமாக, விடுதலையின் பாடலாக வெளிப்படுத்தி அதை நாசரேத் பிரகடனமாக அறிவிக்கிறார். இது வெற்றியின் மிக ஆழமான அறிக்கை என்பதை மறந்து விடாதீர்கள். கடவுளின் இராஜ்யம் அனைவருக்குமானது என்பதை, ஏழைகளுக்கான விடுதலையின் செய்தி எனவும், சிறைப்பட்டோருக்கான விடுதலையின் செய்தி எனவும், அடிமைப்பட்டோருக்கான விடுதலையின் செய்தி எனவும், மொத்தத்தில் தமது வாழ்வு மற்றும் ஊழியத்தின் வழியாக அனைத்து தரப்பு மக்களுக்கான விடுதலையின் செய்தி எனவும் மாற்றித் தந்திருக்கிறார் இயேசு.

பரலோகத்தில் இருப்பதைப் போலவே பூமியிலும் தேவனுடைய ராஜ்யத்தைப் பாடுங்கள் (லூக் 2:14). ஏழைகளுக்கு சொந்தமான ஒரு ராஜ்யம் வருகிறது, இப்போது பசியுடன் இருப்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள், இப்போது அழுபவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் அவர்கள் சிரிப்பார்கள் (லூக் 6:20-22) ஆகிய வசனங்கள் வழியாக இறையரசு என்பது மேல்தட்டு மக்களுக்கானது மட்டும் அல்ல, அது எளியோர், வரியோர் உள்ளிட்ட அனைவருக்குமானது என்பதை விளக்குகிறார் நற்செய்தியாளர் லூக்கா.


இயேசுவும் அவருடைய நற்செய்தி அறிவிப்பும், தேவராஜ்யம் அனைவருக்கும் உரித்தானது என்பதை முன்னறிவிக்கிறது என்பதை வெளிப்படுத்தும் விதமாக லூக்கா நற்செய்தியில் அன்னை மரியாளின் பாடலும் அமைந்துள்ளது. ‘‘அகந்தையுள்ளவர்கள் தங்கள் இருதயத்தின் எண்ணங்களில் சிதறடிக்கப்படுகிறார்கள், பலமுள்ளவர்கள் தங்கள் சிம்மாசனங்களிலிருந்து இறக்கப்படுகிறார்கள், தாழ்ந்தவர்கள் உயர்த்தப்படுகிறார்கள். (லூக் 1:50-53) என இயேசுவின் நற்செய்தி தரும் இறையரசை பாடுகிறார் மரியாள். கடவுளின் இராஜ்யத்தில் நோயுற்றவர்கள் குணமடைகிறார்கள், மேலும் மரணத்தின் மீது இயேசுவின் நற்செய்தி அனைவருக்கும் வெற்றி தருகிறது. கடவுளின் ஆட்சியில் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது; கர்த்தர் எல்லாவற்றையும் புதிதாக்குகிறார். கடவுள் அனைவர் கண்ணீரையும் துடைக்கிறார். ஆகவே கடவுளின் அரசு என்பது அனைத்து தரப்பு மக்களும் எப்போதும் வரவேற்கப்படுகிற இடமாகிறது.

அனைத்து மக்களுக்கும் விடுதலை அளிப்பதற்காக, அனைவரையம் இறையரசில் சேர்ப்பதற்காக இயேசு கடந்து செல்கிறார். கலவரக் கும்பல் வழியாக, தோளில் சிலுவையுடன், மரண இருளைக் கடந்து செல்கிறார். கடைசியாக, இயேசு உயிர்த்தெழுதல் வழியாகக் கடந்து செல்கிறார். அதே இயேசு, இன்று நம் வாழ்வையும் கடந்து செல்கிறார். அவரைப் பற்றிக்கொள்வோம். விடுதலை வாழ்வு பெறுவோம்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா**

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் ஊழிய இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 87



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

## சங்கீதம் – 87

**EPISODE-87**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரிலே உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

''எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிற வர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவு மில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை'' (1கொரி-2:9), என்ற வசனத்தின்படி, கடவுள் தமது பிள்ளைகளுக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதம் குறித்த நம்பிக்கையின் பாடலாகும் இச்சங்கீதம்.

**கடவுளின் நகரம்: (வச 1-3)**

''யெகோவா தமது அஸ்திபாரத்தைப் பரிசுத்த மலையில் அமைத்திருக்கிறார்'' (வச-1 இ.ச.வே) என்று இப்பாடல் துவங்குகிறது. எந்த கட்டிடத்திற்கும் அஸ்திபாரம் மிகவும் இன்றியமையாதது. ''அஸ்திபாரம் சரியாக இல்லாத வீட்டில் நம்பிக்கை வைக்க முடியாது'' என்று யோபு-4:19 சொல்லுகிறது. ''நான் சீயோனிடம் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று சக-8:3ல் நாம் வாசிக்கிறோம். இங்கு 'தாவீதின் நகரம்' என்று எருசலேமை பற்றி கூறப்பட்டி ருந்தாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் சபைக்கு அஸ்திபாரமாய் இருக்கிறார் என்று புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறோம். 1கொரி-3:11ல், ''போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது'' என்றும் எபே-2:20-22ல் ''அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ஆகியோருடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது'' என்றும் கூறப்பட்டுள்ளது.

''தேவன் தமது ஜனங்களின் பட்டியலை வைத்திருக்கிறார். ஒவ்வொருவரும் எங்கே பிறந்தார்கள் என்பதையும் தேவன் அறிந்திருக்கிறார். அவர்களுள் சிலர் எகிப்திலும் பாபிலோனிலும் வசிக்கிறார்கள். சிலர் பெலிஸ்தியாவிலும், தீருவிலும், எத்தியோப்பியாவிலும் பிறந்தார்கள். தேவன் தமது ஜனங்களின் பட்டியலை வைத்திருக்கிறார். சீயோனில் பிறந்த ஒவ்வொருவரையும் தேவன் அறிந்திருக்கிறார்.'' (வச 4-6 பரிசுத்த பைபிள்). இங்கு, உலகத்தில் பிறந்த

அனைத்து மனுமக்களையும் கடவுள் தம் கணக்கு புத்தகத்தில் வைத்திருக்கிறார் என்று இருமுறை கூறப்பட்டுள்ளது. நமது பெயரும் தேவனுடைய புத்தகத்தில் இருக்கிறது என்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய செய்தி அல்லவா? மட்டுமல்ல, 'சீயோனில் பிறந்த ஒவ்வொருவரையும் தேவன் அறிவார்' என்று காண்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொள்ளும் பொழுது நாம் ஆவிக்குரிய சீயோன்வாசிகளாக, ஆண்டவருக்கு விசேஷித்தவர்களாக மாறி விடுகிறோம் என்பது எத்தனை நம்பிக்கையும் மகிழ்ச்சியுமான செய்தி! இயேசுவின் ரத்தத்தினால் கழுவப்பட்ட அனைவரின் பெயரும் ஜீவபுத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது (லூக்-10:20, வெளி-20:15) என்பதை நாம் மறந்துபோகக்கூடாது.

**கடவுளின் ஆசி: (வச-7)**

பரிசுத்த பைபிள் என்ற மொழிபெயர்ப்பில் 7ம் வசனம், ''விசேஷ ஓய்வு நாட்களைக் கொண்டாடுவதற்கு தேவஜனங்கள் எருசலேமுக்குப் போகிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். அவர்கள் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும், எல்லா நன்மைகளும் எருசலேமிலிருந்து வருகின்றன என்கிறார்கள்'' என்று கூறுகிறது.

ஆம், ஆண்டவரிடமிருந்து அனைத்து நன்மைகளும் நமக்கு கிடைக்கின்றது. வாழ்வில் வேதனைகளும் கஷ்டங்களும் வருவது இயல்பு. ஆனால் கடவுள் தம் பிள்ளைகளுக்கு இருதயத்தில் மகிழ்ச்சியை கொடுக்கிறார். ஏசா-56:7ல், ''நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்'' என்றும் ஏசா-26:1ல், ''அக்காலத்திலே யூதாதேசத்தில் பாடப்படும் பாட்டாவது: பெலனான நகரம் நமக்கு உண்டு; இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார்''. என்றும் கடவுள் தரும் இரட்சிப்பின் மகிழ்ச்சியை குறித்து கூறப்பட்டுள்ளது. மட்டுமல்ல, ''கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார்; அவருடைய ஜனத்தில் சிறுமையானவர்கள் அதிலே திடன்கொண்டு தங்குவார்கள்.'' (ஏசா-14:32) என்ற வசனத்தின்படி ஆண்டவர் நம் அனைவரையும் திடப்படுத்தி ஆசிர்வதிப்பார்.

**முடிவுரை:**

''நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்துசேர்ந்தீர்கள். பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால்

எப்படித் தப்பிப்போவோம்?” (எபி 12:22-25) என வேதம் நம்மை எச்சரிக்கிறது. நாம் மூலைக்கல்லும் அஸ்திபாரமுமாகிய ஆண்டவர் மேல் கட்டப்பட்டவர்களாக வாழ அழைக்கப்படுகிறோம் (1பேது 2:4-8). கர்த்தர்தாமே அவரது நித்திய ராஜ்யத்தில் - பரம சீயோனில் பங்கடைய நமக்கு கிருபை செய்வாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

### Good Tidings Bible-Prints Ministries

### (GOOD SEEDS - கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள். கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

## ‘அனைவரும் ஊழியத்தில்’

ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

**இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு**

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை **கடிதம்** அல்லது **வாடஸ்-அப்-ல்** எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை–93, தென்னிந்தியா

# வேதாகம போட்டி–165 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7) அன்னாள் ஜெபக்கனி CBE
8) அனி பாய் ஜாண் TIN
9) அனிதா ஜாண் CBE
10) அரோமா சாத்ராக் TIN
11) ஆர்தர் மாசில்லாமணி CHE
12) அருள்செல்வி VIR
13) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
14) பெல்சி தங்கராஜ் CHE
15) பெனிட்டா பிராங்க்ளின் CHE
16) பெ.ஃட்டி பிரின்ஸ் CHE
17) பியூலா ஜேசுராஜன் PON
18) பியூலா ராஜசெல்வன் CBE
19) செலினா பென்சி வில்சன் DR, KUW
20) செலினா வின்செண்ட் TIN
21) சந்திராபாய் மாசிலாமணி AVD
22) சந்திரலேகா KAL-AP
23) சந்திரா மேரி விஜயன் BAN
24) சந்திரா சாமுவேல் TIN
25) சார்லஸ் ஃபின்னி DR CHE
26) சார்லட் டேவிட் CHE
27) சித்ரா பெஞ்சமின் TVL
28) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
29) கிறிஸ்துதாஸ் GOP
30) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR TIN
31) கிறிஸ்டி ஞானராஜ் CHE
32) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
33) கிறிஸ்டி பொன்னுசாமி MDU
34) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
35) சிந்தி ஜோஷ்வா CKA-TNJ
36) டெய்ஸி பில்பா MUM
37) டெய்ஸி ஜெபதாஸ் TCY
38) டெய்ஸி சாம் KAL-AP
39) டேனியல் தாமஸ் TIN
40) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
41) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
42) தெபோராள் D. CHE
43) டெல்வின் இம்மானுவேல் CBE
44) தேவமணி ஆபிரகாம் TUT
45) தேவநேசம் ராஜாசிங் CHE
46) டோராபாய் CHE
47) எபநேசர் கிரேஸ்லின் சாந்தி TIN
48) எலிசபெத் செல்லத்துரை CHE
49) எமிமாள் மில்டன் CHE
50) எஸ்தர் D.R. TIN
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
52) குளோரி ரவீந்திரன் TIN
53) ஞானம் ஜெபராஜ் TIN
54) ஞானம் பிலிப் CBE
55) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
56) ஞானசுந்தரி நாகராஜன் TIN
57) கோல்டா ஜேசுபாதம் MUM
58) கிரேஸ் டேனி TEN
59) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
60) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
61) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
62) கிரேஸியா ஜெயபால் CHE
63) கிரிசெல்டா செய்லர் CHE
64) குணவதி ஜெபமணி CHE
65) ஹெலென் ஜான்சிராணி TIN
66) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
67) ஹெலன் திலக் TUT
68) ஹேமா அஜீத் CHE
69) ஹேமா கேப்ரியேல் BAN
70) ஹெப்சி அசரியா PON
71) ஹெப்சிபா மங்களராஜ் TIN
72) ஹிம்லா ராஜகுமாரி CHE
73) இளவரசி ஜோபிதா CBE
74) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
75) இந்திரா கெத்ஸி டேவிட் DR. TIN
76) ஜமீலா செல்வராஜ் CHE
77) ஜேன் தர்மராஜ் MAR
78) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI

79) ஜான்ஸி ரோஸ்மேரி TIN
80) ஜான்ஸி சந்தியா MAR TIN
81) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
82) ஜெபா ஜெயராஜ் AVD
83) ஜெபக்குட்டி மோசஸ் TIN
84) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
85) ஜெபசீலி கிளின்டன் CHE
86) ஜெபா சீனி MAR TIN
87) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
88) ஜெமீலா நிக்ஸன் CHE
89) ஜெனிலா CHE
90) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
91) ஜெனிட்டா ஹெலென் CBE
92) ஜெனித்தா செல்வின் TIN
93) ஜெரின் ஸ்டீபன் MUM
94) ஜெஸி செல்லதுரை CBE
95) ஜெஸி ஜெயக்குமார் TIN
96) ஜெஸிதா அகஸ்டின் KUR-AP
97) ஜெயா ஆல்பர்ட் KUM
98) ஜெயசெல்வி முத்துராமன் TIN
99) ஜோனா ஸ்டீபன் AVD
100) ஜோஸ்பின் ஜெஸி CHE
101) ஜாய்ஸ் பாண்டியன் CHE
102) ஜூலியட் ஜெபா CHE
103) ஜூலியட் ஜெயக்குமார் TIN
104) கலா கிருபாகரன் TIN
105) கலையரசி செல்வராஜ் CHE
106) கஸ்தூரி எலியாஸ் TIN
107) கிருபாவதி S. CHE
108) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
109) லதா மைகேல்ராஜ் CHE
110) லீலா ஜோஸப் CBE
111) லில்லி ஜாண்ஸன் CHE
112) லிஸி டென்சிங் TIN
113) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
114) மல்லிகா V. CHE
115) மரிய பாப்பா CHE
116) மரியாள் ஜே.எஸ். TUT
117) மெஜிலா ஜோஷ்வா TUT
118) மெரிட்டா ஜெயபாலன் TCY
119) நேச மாலா பீட்டர் TIN
120) நகோமி நிர்மலா CHE
121) நிக்ஸன் எவர்பிரைட் TIN
122) ஆலிவ் ஜெயபாலன் CBE
123) பாக்யபாய் ஆரோன் TIN
124) பெர்சி பால் பொன்சிங் TUT
125) பிங்க்லின் சந்தோஷ் CHE
126) பொன்மணி உத்தமசிங் TUT
127) பிரேமா ஜானி TEN
128) பிரேமா ஸ்டாலின் CHE
129) பிரேம்குமாரி ஜெய்சிங் CHE
130) பிரின்ஸ் தயாநிதி CHE
131) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
132) பிரிசில்லா தாஸ் CHE
133) பிரிஸ்கில்லாள் சசி CBE
134) ரேச்சல் ஈஸ்டர் VEL
135) ரேச்சல் கனகராஜ் CBE
136) ராஜபிரமீளா TPT
137) ராஜகுமாரி சன்னியசிமுத்து TUT
138) ராஜ்மேரி சார்லஸ் KER
139) ரமோலா அதிசயராஜ் TIN
140) ராணி ஃபுளோரா APM-TEN
141) ராணி பிரபாகர் TIN
142) ராணி சாமுவேல்ராஜ் CHE
143) ரத்னாவதி பாண்டியன் CHE
144) ரோஸ்லின் மார்கிரெட் CHE
145) ரோஸி ஸ்டீபன் CHE
146) ரூபவதி நோபிள் TIN
147) ரூத் HAPP-TCY
148) ரூத் ஜாண்ஸன் TIN
149) சலோமி மனோகர் DR. CHE
150) சங்கீதா ஜெனிஸ் TIN
151) சம்பு ஜெயசந்திரன் MDU
152) சாமுவேல் டேவிட் TPT
153) சாரா பாலசிங் MDU
154) சரோஜா செல்வராஜ் CHE
155) சரோஜினி எலிசபெத் CHE
156) சீலியா MS. T. APM-TEN
157) செல்வ அமுதா ஜார்ஸ் CHE
158) செல்வராஜ் K. CBE
159) செல்வராணி ஆல்பர்ட் CHE

## வேதாகம போட்டி–165 சரியான பதிலளித்தோர் – 11ம் பக்கத் தொடர்ச்சி

160) செல்வி S. CHE
161) செல்வி அமிர்தராஜ் TVR
162) ஷாலி எடிசன் CHE
163) சாந்தி ஆல்பர்ட் PCT
164) சாந்தி ஜெயசீலன் CHE
165) சாந்தி ரோஸ் CBE
166) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
167) ஷீபா சாம்ஸன் CHE
168) ஷீலா G. PNR-TVL
169) ஷீலா இஸ்ரேல் TCY
170) ஷெரீன் ஜெபராஜ் PNR-TVL
171) சில்வியா ஃபின்னி DR. CHE
172) சவுந்தரி பிரபாகர் TVL
173) சவுந்தரம் சாலமோன் CHE
174) ஸ்டெல்லா டேவிட் TUT
175) ஸ்டெல்லா கனகராஜ் CHE
176) ஸ்டெல்லா சூசைய்யா TUT
177) சுகிர்தா ஆல்வின் CHE
178) சுகிர்தா சின்னதுரை TIN
179) சுஜாதா சாமுவேல் CHE
180) சுமித்ரா B. CHE
181) சுந்தரி அன்பழகன் TEN
182) சுசீலா தியோடர் TCY
183) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
184) தனசீலி ஞானராஜ் CHE
185) தெல்மா ஸ்டேன்லி MDU
186) உமா குளோரி CHE
187) வனஜா ஹெர்பர்ட் TIN
188) வசந்தா அன்பன் TIN
189) வசந்தா சந்திரசேகர் CBE
190) வசந்தா துரைராஜ் OFT-TCY
191) வசந்தி கருணாகரன் CHE
192) வசந்தி வாசன் CHE
193) விஜயராணி A. CHE
194) விஜி டேனியல் CPT
195) விமலா ஜெயக்குமார் TUT
196) விண்ணரசி ரோஸ் CHE
197) வினோலியா ஜேம்ஸ் TUT
198) வினோலியா வில்சன் VAN
199) வைலட் கிறிஸ்டோபர் TIN
200) வைலட் சைரஸ் TIN

## வேதாகமப் போட்டி-164 சரியான பதிலளித்தோர்

1) லதா மைகேல்ராஜ்
2) நகோமி நிர்மலா
3) ரத்தினாவதி பாண்டியன்
4) செல்வ அமுதா ஜார்ஜ்
5) சுகிர்தா சின்னதுரை

## வேதாகம போட்டி–165 சரியான விடைகள்
## (1தெசலோனிகேயர் முதல் தீத்து வரை)

1. பரிசுத்தமாய், கனமாய் 1தெச:-4:5
2. தேவபக்தி 1தீமோ:-4:8
3. தேமா 2தீமோ:-4:10
4. சகோதரிகளைப் போல 1தீமோ:-5:2
5. இராத்திரியிலே 1தெச:-5:7
6. ஒநேசிபோருவின் 1தீமோ:-1:16,17
7. வேதபுரட்டனான ஒருவனுக்கு தீத்து:-3:10
8. கொடிய வஞ்சகத்தை 2தெச:-2:12
9. சரி - 1தீமோ:-3:1
10. தவறு - 2தீமோ:-2:6
11. சரி - 1தெச:-4:7
12. சரி - 1தீமோ:-4:4
13. ஈ - விசுவாசிகள் 1தெச:-1:7
14. இ - கிரேத்தா தீவார் தீத்து:-1:12
15. ஈ - நன்மை 2தெச:-3:13
16. ஆ - கப்பலை 1தீமோ:-1:19
17. கேட்டின் மகன்-பாவ மனுஷன் 2தெச:-2:3
18. சுவிசேஷம் 1தெச:-1:5
19. நியாயப்பிரமாணம் 1தீமோ:-1:7-11
20. லோவிசாள் 2தீமோ:-1:2-5

# வேதாகம போட்டி-166

வேத–பகுதி: பிலேமோன், எபிரேயர் மற்றும் யாக்கோபு நிருபங்கள்

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்க கடைசிநாள்: 25–08–2024

1. எந்தக் கோத்திரத்தாரின் ஆசாரியத்துவத்தைப்பற்றி மோசே ஒன்றும் சொல்லவில்லை?

2. முன்மாரியும் பின்மாரியும் வரும்வரை, நீடிய பொறுமையோடு காத்திருக்கிறவன் யார்?

3. யாருடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்று?

4. சமாதானத்தை நடப்பிக்கிறவர்களால் சமாதானத்தில் விதைக்கப்படுகிறது - இது என்ன?

5. யார் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது?

6. ஒருவன் எந்நிலையில் ஜெபிக்கவும் எந்நிலையில் சங்கீதம் பாடவும் வேண்டும்?

7. 'கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகன்' என பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்?

8. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியால் எதில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்?

9. 'வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்' - **சரியா தவறா**?

10. 'சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது' - **சரியா தவறா**?

11. 'நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது' - **சரியா தவறா**?

12. 'மனுஷர் தங்களிலும் பெரியவர் தலையில் ஆணையிடுவார்கள்' - **சரியா தவறா**?

13. '**இது**' நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது:
அ) தேவபக்தி ஆ) மனவுறுதி இ) திடநம்பிக்கை ஈ) விசுவாசம்

14. '**இவன்**' தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்:
அ) மதியற்றவன் ஆ) ஆத்திரமுள்ளவன் இ) இருமனமுள்ளவன் ஈ) கோபமுள்ளவன்

15. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், '**இதுவும்**' மாற்றப்படவேண்டியதாகும்:
அ) பலிபீடமும் ஆ) நியாயப்பிரமாணமும் இ) தசமபாகமும் ஈ) கிருபாசனமும்

16. எந்த சிட்சையும் தற்காலத்தில் '**இவ்விதமாய்**' காணாமல் துக்கமாய் காணும்:
அ) சந்தோஷமாய் ஆ) பிரயோஜனமாய் இ) விருப்பமாய் (ஈ) எளிதாய்

17. ஆதி-அந்தம் இல்லாதவன்! அப்பன்-அம்மை இல்லாதவன்! வம்ச-அம்சம் அறியாதவன்! அமைதியின் அரசன், புகழ்மிக்க புருஷன்! தசமபாகம் பெற்றவன், விசேஷ பாடம் ஆனவன்! **இவன் யார்?**

18. உருட்டி சுருட்டிய, உலகத்தின் தோள்-உடை! உன்னதர் கரமதில் உருவான மேலுடை! பழசாக மாறிடும், காலத்தில் அழிந்திடும்! **இது என்ன?**

19. சிறுசா இருக்கும், பெருசா பேசும்! உடலைக் கெடுக்கும், உயிரை எரிக்கும்! பற்றி எரியும், பற்ற-வைக்கும்! கொல்லும் விஷம் இது, பொல்லாத தீமை இது! **இது என்ன?**

20. அறியாத இடம்-தேடி ஆவலுடன் சென்றான்! ஆணையின் தேசத்தில் அந்நியன் போல் வாழ்ந்தான்! ஆண்டவர் கட்டிய அஸ்திபார-நகருக்கு ஆயத்தமானான்! **இவன் யார்?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-08-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-63

பாகம்-63



SIS.C. ANGEL

கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவும் மாட்டார். உபா–4:31

FOR THE LORD IS A MERCIFUL GOD; HE WILL NOT FORSAKE THEE, NEITHER DESTROY THEE. DEU-4:31

MERCIFUL GOD EL RACHUM

## இரக்கமுள்ள தேவன்

'எல் ராக்ஹூம்'

நம் மீது இரக்கமாய் இருக்க சித்தமானவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசி களுக்கு ஆகஸ்டு மாத சமாதானத்தின் வாழ்த்துக்கள்.

**எபே-2:4** தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் தம்முடைய மிகுந்த அன்பினாலே நம்மில் அன்புகூர்ந்தார்.

**லூக்-1:50,58** இயேசு கிறிஸ்துவின் இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

**கர்த்தர் தமது இரக்கங்களை விளங்கப்பண்ணுவதால் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு வரப்போகிற நன்மைகள்:**

**ஏசா-49:10,13** சிறுமைப்பட்டவர்களாய் கண்ணீரோடு வாழ்கிறவர்களை நீரூற்றுகளிடத்தில் (அபிஷேக நீரூற்று) கொண்டுபோய் விடுகிறார்.

**ஏசா-30:18** நீடிய பொறுமையுடன் நமக்கு இரங்கக் காத்திருக்கும் தேவன், நமக்கு நீதிசெய்து நம்மை பாக்கியவானாக, பாக்கியவதியாக முடிசூட்டுகிறார்.

**எரே-30:18,19,20** விசாரிப்பாரற்று தள்ளப்பட்ட நிலையிலிருக்கிற தம் பிள்ளை களான நமது சிறையிருப்பைத் திருப்பி, நம் கூடாரத்தை ஒரு குட்டி பரலோகமாக்கி துதியும் ஆடல்-பாடல் சத்தமும் உண்டாகும்படி வர்த்திக்கப்பண்ணி மகிமைப்படுகிறார். பிள்ளைகளை இரட்சிப்பினால் அலங்கரிக்கிறார். உங்கள் சபை திடப்படும். உங்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன் என்கிறார்.

**ஜெபம்:** எங்கள் பிதாக்களுக்கு வாக்குப்பண்ணின இரக்கத்தைச் செய்து, உமது பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளின தேவனே, உமக்கு ஸ்தோத்திரம். நீர் ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை (சமாதானத்தின் வழி - உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்) எங்கள் வாழ்வில் நிறைவேற்றும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ.C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-159•

## ஜெபம் என்னும் தொலைப்பேசி வாயிலாக

# நம்பினோரைக் காக்கும் தேவன்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

தொலை தொடர்பு வசதிகள் இல்லாத காலத்தில் ராபர்ட் என்னும் ஒரு தேவ மனிதர் பிரான்ஸ் தேசத்தில் பிரசித்தி பெற்ற ஒரு கம்பெனியில் எஞ்சீனியராக பணியாற்றினார். அவர், தனது விடுமுறை நாட்களை ஜெர்மனியிலுள்ள ஜோயல் என்னும் தன் நண்பருடன் கழிக்க விரும்பி ஜெர்மன் தேசத்துக்கு கடல்-பயணம் மேற்கொண்டார். புறப்பட்ட அவசரத்தில் நண்பரின் முகவரியை வீட்டில் விட்டுவிட்டார். கடல் பயணத்தின்போது தான் முகவரியை விட்டுவிட்டது நினைவிற்கு வந்தது. ‘‘நண்பரின் முகவரியை எடுத்துவரவில்லையே எப்படி ஜெர்மனியில் அவரை சந்திக்கப்போகிறேன்’’ என ராபர்ட் கலங்கினார் ஆனாலும், ‘‘நான் நம்புகிற இயேசு என்னைக் கைவிடமாட்டார்; என்னை நேராய் வழிநடத்துவார்’’ என தன்னுள் சொல்லிக்கொண்டு ஜெபத்தோடு பயணம்செய்தார்.

ஜெர்மனியில் நண்பர் ஜோயல் பணியாற்றும் கம்பெனியில், அவரது மேனேஜர் குறிப்பிட்ட நாளிலே ஒரு அலுவல் காரணமாக ஜோயலை ஜெர்மனியிலுள்ள குறிப்பிட்ட துறை முகத்திற்கு செல்ல உத்தரவிட்டிருந்தார். என்ன ஆச்சரியம், ஜோயல் எந்த நாளில், எந்த துறைமுகத்திற்கு வந்தாரோ அதே நாளில் ராபர்ட் பயணம் செய்த கப்பலும் அதே துறைமுகத்திற்கு வந்தடைந்தது. ராபர்ட் கப்பலிலிருந்து இறங்கி வந்த அதே நேரத்தில் ஜோயல் வேறொருவரை சந்திப்பதற்காக அங்கே காத்துக்கொண்டிருந்தார். நண்பர் ஜோயலைக் அங்கே கண்ட ராபர்ட் ஆச்சர்ய மிகுதியால் ஆனந்த கூத்தாடினார். அவருக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை; நண்பர் ஜோயலை கட்டித் தழுவி மகிழ்ச்சியில் திளைத்தார். ராபர்ட்டின் ஜெபத்தைக் கேட்டு அவரை கைவிடாமல் அற்புதமாக வழிநடத்திய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு நண்பர்கள் இருவரும் வீட்டிற்கு புறப்பட்டுச்சென்றனர்.

பிரியமானவர்களே! நம் வாழ்வில்கூட எதிர்பாராத சூழ்நிலைகளில் ராபர்டைப்போல் பிரச்சனையில் தவிக்கும்போது உறுதியான விசுவாசத்தோடு இயேசுவைப் பற்றிப் பிடித்துக்கொள்வோமானால், ‘‘உன்னை அதிசயங்களை காணச்செய்வேன்’’ (மீகா 7:15) என்ற வசனத்தின்படி நாம் கேட்பதற்கும், எதிர்பார்ப்பதற்கும் அதிகமாக, நமது நெருக்கடியான சூழ்நிலைகளிலிருந்து அவர் நம்மை விடுவிப்பார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகையால், நமது கவலை கஷ்டங்களை ‘ஜெபம்’ என்னும் தொலைப்பேசியின் வழியாக இயேசுவிடம் தெரிவித்து, அவரைப் பற்றிக் கொண்டு மேலான ஆசீர்வாதங்களை பெற அனைவரையும் வாழ்த்துகிறேன்.

வேதம் இவ்வாறு கூறுகிறது:

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். சங்கீதம் 46:1

கர்த்தரை நம்பியிருக்கிறேன்; நான் தள்ளாடுவதில்லை. சங் 26:1

நான் நம்புகிறது அவராலே வரும். சங்கீதம் 62:5

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். சங்கீதம் 55:22



சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, ‘Ratchippu’ Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 25

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-5 பகுதி-5

**5. ஜெசுவைட்ஸ்"ம் இந்திய திருச்சபையும்**

**5. இந்தியாவில் சேவியரின் கடைசி நாட்கள்**

இந்தியாவில் ஜேசுவைட்டுகள், வருகைக்குப் பிறகு முதன்முறையாக அவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு பல்வேறு நன்மைகளையும் குறைபாடுகளையும் கொண்டிருந்தது. இந்தியாவில் பணியமர்த்தப்பட்ட ஜெசுவைட்-களில் பெரும்பாலோர் ஐரோப்பாவிலிருந்து இருந்து அனுப்பப்பட்டவர்கள் அதில் பெரும்பாலானோர் குறிப்பாக போர்ச்சுகல்லைச் சேர்ந்தவர்கள்.

இக்னேஷியஸ் சார்பாக சைமன் ரோட்ரிக்ஸ் மாகாணசபையாக பணியாற்றினார். ஜேசுயிட்கள் வந்தபின் அவர்கள் தங்களை இந்திய சமூகத்துடன் நிரந்தரமாக இணைத்துக் கொள்ள விரும்பினர். அல்லது அதற்குப் பிறகு, அத்தகைய தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தார்கள் எனலாம். இளைஞர்கள், வெளிநாட்டு மிஷனெரிகளின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டனர். ஆயினும், மிஷனரி பணியின் தியாகங்கள் பற்றிய தெளிவான யோசனை என்பது ஆண்டனி கோம்ஸ் தலைவராக செயல்பட்டபோதுதான் ஏற்பட்டது,

ஒரு மெஸ்டிசோ உள்ளிட்ட போலண்டு பணியாளர்களை ஏற்றுக்கொள்வதற்கு சேவியர் ஓரளவு தயக்கம் காட்டியதால் அவர்களில் சிலர் நிராகரிக்கப்பட்டனர். இந்தியாவில் ஆட்சேர்ப்பு மூலம் சமூகத்தின் சக்திகளை கட்டியெழுப்புவதற்கான சாத்தியம் உண்டு என்பதில் ஒரு பெருத்த சந்தேகம் ஏற்பட்டது. இந்திய மத குருமார்கள் இரும்பு மனிதர்கள் என்று நினைக்க இது சேவியரை ஊக்குவிக்க வில்லை. அவர் தனது சக ஊழியர்களிடம் தாம் எதிர்பார்த்த தீர்மானம் பொதுவாக நிலைத்தன்மை இல்லாதது என கண்டார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கீழ்ப்படியாமை காரணமாகவும், இயேசு கிறிஸ்துவின் தொண்டு, தியாகம் மற்றும் அதன் ஆழமான தன்மையை புரிந்து கொள்ளவில்லை என்ற காரணத்திற்காகவும் பணியமர்த்தப்பட்டவர்களில் சிலரை சேவியர், தமது ஜெசுவைட் சமூகத்தில் இருந்து நீக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நிபந்தனையற்ற, சந்தேகத்திற்கு இடமில்லாத, எதிர்கேள்வி கேட்க்காத முழுமையான கீழ்ப்படிதல்தான் சமூகத்தின் உயிர்நாடி என்ற சேவியரின் கருத்து தான் இத்தகைய அவரது நடவடிக்கைக்குக் காரணம்.

சவேரியார் (சேவியர்), முத்துக்குளித்துறை மக்களுக்குக் கிறிஸ்தவத்தை அறிவித்தபின் கி.பி.1546ம் ஆண்டில் அந்தோனியோ கிரிமினாலி என்ற இயேசு சபைக் குருவும் அதற்கு அடுத்த ஆண்டு ஹென்றி ஹென்றிக்ஸ் (கி.பி.1520-1600) என்ற இயேசு சபைக் குருவும் அங்குப் பணியாற்றினர். சவேரியாரின் விருப்பத்துக்கு இணங்க ஹென்றிக்ஸ் தமிழ்மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார். அவர் சவேரியாரின் சின்னக் குறிப்பிடத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தார். மறைக்கல்விப் புத்தகங்களைத் தமிழில் உருவாக்கியதுடன் பல இறையியல் நூல்களை தமிழில் மொழிபெயர்த்தார். இப்புத்தகங்களின் கையெழுத்துப் பிரதிகள் முக்கிய ஊர்களிலுள்ள தமிழ்ப்பேசும் திருச்சபை களுக்குக் கொடுத்து அனுப்பப்பட்டன.

சேவியர் கி.பி.1549ல் ஜப்பான் சென்றார். கி.பி.1549ம் ஆண்டு முதல் கி.பி.1552ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தின் பெரும்பகுதியை சேவியர் தனது ஜப்பான் ஊழியங்களில் செலவிட்டார்.

கி.பி.1579ல் கொச்சியிலிருந்து அனுப்பப்பட்ட ஆண்டறிக்கையின்படி, முத்துக் குளித்துறையில் பரவர், கரையர் உள்ளிட்ட எல்லா மக்களும் கிறிஸ்தவர்களாக மாறியிருந்தாலும், அதன் பின்னரும் தூத்துக்குடியில் சுமார் 500பேர், மன்னாரில் சுமார் 500பேர் என, 1000 முதியவர்கள் அவ்வாண்டின் பின்பகுதியில் திருமுழுக்குப் பெற்றனர். மட்டுமல்லாமல், இன்னும் 500பேர் திருமுழுக்குக்காகக் காத்திருந்தனர். இவர்கள் எல்லாரும் உள்நாட்டுப் களிலிருந்து முத்துக்குளித்துறை சென்றவர்கள்.

சேவியர் குறிப்பாக, கன்னியாகுமரி, கோட்டயம், குளச்சல், ஆலந்தலை, தூத்துக்குடி மற்றும் மணப்பாடு பகுதிகளில் தங்கி இறைப்பணி நிறைவேற்றி வந்தார். இந்தியாவில் கோவா, கொச்சி மற்றும் கிராங்கனூரில் திருச்சபை மற்றும் தேவாலயத்தின் ஆன்மீக நல்வாழ்வுக்கான குறைந்தபட்ச அக்கறை கொண்ட பிரான்சிஸ்கன்கள் அவ்விடங்களில் பணியமர்த்தப்பட்டனர்.

சேவியர், தனது சமகாலத்தவர்களின் பார்வையைப் புரிந்து, பகிர்ந்துகொண்டார். அவர், போர்த்துகீசியரின் வாக்குமூலங்களைக் கேட்பதில் சற்றும் அயராதவர். ஆயினும், இந்திய கிறிஸ்தவர்களின் வாக்குமூலங்களைக் கேட்க சேவியர் ஒருபோதும் துணியவில்லை. ஒருவேளை அவர், தாம் பேசாத மொழியில் வாக்கு மூலங்களைக் கேட்க வேண்டியதிருந்ததால் அப்படித் தயங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மக்களிடம் ஜெசுவைட்டுகளின் தொடர்பு குறைவாக இருந்தது. ஆனாலும் அரை நூற்றாண்டு பணியின் முடிவில் மக்கள் மத்தியில் அவர்களின் புகழ் உயர்ந்திருந்தது. இந்திய கிறிஸ்தவ திருச்சபையின் நிலை, நிறைவாகவும் முழுமையாக இருந்தது. ஆசியா முழுவதும் கிறிஸ்தவத்தை பரப்பிய முதல் மேற்கத்தியர்கள் போர்த்துகீசியரே என்பதில் சந்தேகமில்லை.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

## PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஆகஸ்டு - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 09-08-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 16-08-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 23-08-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS:**

MOBILE:
9962924900/7871676100
WHATSAPP:
9789914463/7871676100
E-MAIL:
sjddharmaraja@gmail.com
POSTAL ADDRESS:
REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR,
NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME:
DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO:
601071548.
BANK & BRANCH:
INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE:
IDIB000N122.
BANK ADDRESS:
NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

GOOGL-PAY (G-PAY) NAME:
REV. DHARMARAJA SJD
G-PAY NUMBER:
9789914463
QR CODE
FOR SCANNING
OUR WEBSITE:
www.ratchippu.com

Rev. Dharmaraja S.J.D
UPI ID: sjddharmaraja@okhdfcbank

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, 1st floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... இயற்கைப் பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட... பாரீஸ் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டு வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் போதிய பாதுகாப்பு கிடைக்க...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... இந்தியாவில் பதவியேற்றுள்ள புதிய ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளை மதித்து அனைத்து தரப்பு மக்கள் நலனுக்காகவும் பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பிளஸ்-2 வரையில் கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்காக... தொழில்-முறைக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி பட்டப்படிப்புகளுக்கான கலந்தாய்வுகள், நேர்முகத் தேர்வுகளை சந்திக்கும் பிள்ளைகளுக்கு தேவையான ஞானம் வழங்கப்பட...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் எஸ்தர் பெரின், ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) திருமதி. லீலா டேவிட், திரு. சுகிர்தராஜன், திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், REV. கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ∴ பிளாரன்ஸ் ராஜமணி, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. சாம் ஞானசிங், திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR. ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. லிஸி லிவிங்ஸ்டன், திருமதி. ஜான்ஸி செல்வின், திருமதி. ஜெஸி செல்லதுரை, திருமதி. ராஜபிரமீளா, திருமதி. பிரிஸ்கில்லாள் சசி, அருட்திரு. பொன்சிங் சாமுவேல், திருமதி. சிந்தி ஜோஷ்வா, திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரின் குடும்பத்தாருக்காக..

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th August 2024.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. சுனிதா வில்லியம்ஸ் - புட்ச் வில்மோர் ஆகியோரது 8நாள் விண்வெளிப்-பயணம் 50நாட்களைக் கடந்தது. ஸ்டார்லைனர் விண்கலத்தில் பழுது-நீக்கம் செய்ய 'நாசா' தொடர் முயற்சி. விண்கலம் பூமிக்கு திரும்பும் தேதி அறிவிக்கப்படவில்லை.

2. மெட்ரோ ரயில் மற்றும் ரயில்-நிலையத்தில் ரீல்ஸ்-வீடியோ எடுப்பது மற்றும் உணவு உண்பது போன்ற செயல்களை செய்துவந்த 1647பேர் மீது டெல்லி-மெட்ரோ ரயில் நிறுவனம் வழக்கு பதிவு செய்து அபராதம் விதித்துள்ளது.

3. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் 4.5லட்சம் குடும்ப அட்டைகள் இறப்பு மற்றும் இடம்பெயர்தல் காரணமாக ரத்துசெய்யப்பட்டதாகவும். 4.5லட்சம் பேருக்கு 'ஸ்மார்ட்' குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டதாகவும் கூட்டுறவு-உணவுத்துறை தகவல்.

4. சென்னை சென்ட்ரல், எழும்பூர், கடற்கரை உள்ளிட்ட பெருநகர ரயில் நிலையங்களில் கல்லூரி மாணவர்கள் (ரூட்-தல) மோதலை தடுக்கும் வகையிலான, ரயில்வே போலீஸின் ஒலிபெருக்கி-எச்சரிக்கை-பணி தொடங்கியது.

5. பிரான்ஸ்-தலைநகர் பாரீசில் ஜூலை-26 முதல் நடைபெறுகிற 33வது ஒலிம்பிக் போட்டிகளில் 118பேர் கொண்ட இந்திய அணியினர் 16வகை போட்டிகளில் பங்கேற்கின்றனர். அவர்களின் பயிற்சிக்கு இந்தியா ரூ.470 கோடி ஒதுக்கீடு.

Posted on: 10th August 2024

To

# சுதந்திர தினம்

## நல் வாழ்த்துக்கள்

அன்பான இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறைமக்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த **சுதந்திர தினம்-2024 நல்வாழ்த்துக்கள்.**




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.